# சிறகு



கற்றல் வளநிலையம்.

யா/வரணி மத்திய கல்லூரி.

2017

# வாழ்த்துச் செய்தி

"நாம் கற்ற கலைகளே அழியாச் செல்வம்" என்பதற்கு ஏற்ப மாணவர்களின் அறிவு வளர்ச்சியில் நூலகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவ்வகையில் எமது கல்லூரி நூலகமும் பெருமளவு நூல்களைக் கொண்டு சேவையாற்றி வருகின்றது. மாணவர்களின் அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவு கோலாக விளங்குகின்றது என்றால் மிகை ஆகாது.

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்த பலர் அறிஞர்களாக உருவாகியுள்ளார்கள் என்பதால் அது நூலகங்களாலேயே ஆகும். காமராஜர், எம்.ஜி.ஆர் போன்றோர் இவ்வகையில் உயர்ந்த நிலைக்கு வந்தார்கள்.

"கண்டதும் கற்பவன் பண்டிதனாவான்" என்ற நாட்டுப் பழமொழி வாயிலாகவும் நூலகச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. எமது கல்லூரி நூலகம் மாணவர்களை ஊக்குவித்து சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது.

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற குறளின் அறிவு ஆராய்ச்சிப் பண்புக்கு நூலகங்கள் வழிகாட்டுகின்றன.

எமது நூலகம் மேலும் பல்துறை வளர்ச்சி பெற வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

அதிபர்

## வாசிப்போர் வெற்றி பெறுவார்

வாசிப்போர் வெற்றி பெறுவார் என்பதன் கருத்து நாம் நல்ல நல்ல புத்தகங்களை வாசிப்பதன் மூலம் எமது அறிவை வளர்ச்சி செய்வதுடன் நாம் முன்னேறவும் முடியும். எமக்கு புத்தகமே நல்ல அறிவை பெற்றுத் தரும் என பல்வேறு புலமை ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். கல்வி அறிவு அற்ற சமுதாயத்தில் ஒரு மனிதன் மனிதப் பண்புகளுடன் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு அத்தியாவசியமானது. இதனை திருவள்ளுவர் பல்வேறு குறள்களின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றார். "விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" அதாவது கல்வி அறிவை பெற்றுக் கொள்பவனையே புலமையாளர்கள் போற்றுகின்றார்கள் அத்தகைய அறிவினை பெறாதவர்களை விலங்குகள் என்று குறிப்பிடுகின்றார்.

கல்வி அறிவுப் படைத்தோரையே இவ் உலகு மனிதர்களாக மதிக்கும் என்பது புலனாகின்றது. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் பெறுமதிவாய்ந்த அரிய நூல்களை வாசிக்க வேண்டும். அவன் கல்வி அறிவை தேடிக் கொள்ளுதல் வேண்டும் இதன் மூலம் நாம் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"நூல் பல கல்" என்றார் ஔவையார் எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும் "காண்பது கற்கப் பண்டிதன் ஆவான்" என்பது நமது சான்றோர் வாக்கு ரஸ்கின் என்கிற ஆங்கில அறிஞர் "புத்தகங்களைப் போன்ற சிறந்த செல்வங்கள் எதுவும் மனிதருக்கு இருக்க முடியாது" எனக் கூறுகிறார் வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் பொருளாகக் களவாடப் படுவதில்லை புத்தகங்களை வாசிப்பதால் இவ் இன்பங்களை மற்றவர்கள் நம்மிடம் பறித்து விட முடியாது.

வாசிக்கும் பழக்கம் ஒவ்வொருவரின் வாழ்க்கை அடித்தளமாக இருக்கும். வாசிப்பதன் மூலம் அறிவு வளர்ச்சி அடைகின்றது. பல்வேறு அறிவையும் பெற்றுக் கொள்ள முடிகிறது. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் சிந்தித்து கொள்ளவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறது. வாழ்வு வளம் பெற்றுக் கொள்ள அறிவு தேவை அறிவைப் பெற்ற நூல்களை வாசித்தல் அவசியமாகும் நூல்களை வாசிக்கும் போது நல்ல நூல்களை தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும். அப்போது தான் நாம் வாழ்க்கைய மனநிறைவைப் பெற்றுக் கொள்ள முடியும். வாசித்தல் சிறந்த ஒரு பொழுது போக்கு மகிழ்வைத் தந்து அறிவைப் பெருக்க உதவுவன நூல்களே ஆகும். மாணவர் இதனை மனதிற் கொள்ளுதல் அவசியமாகும்.

நூல்களை வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் தனிமை உணர்வை ஒரு போதும் பெறுவதில்லை ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களை அவர்கள் நாடிச் சென்று விட முடியும் வாழ்வில் கவலை சோர்வோ ஏற்படுகின்ற போதெல்லாம் வாசிப்பு. நூல்களை படிப்பதன் மூலம் அவற்றைப் போக்கிக் கொள்ள முடியும் "என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்க் கூறினார் அறிஞர் ஒருவர் அதே போன்று வாசிப்பு மனிதனை பூரணமாக்கின்றது என்றார் அறிஞர் பேக்கன் அப்படி சிறந்த எண்ணையில் நாம் ஓய்வு நேரங்களை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிட வேண்டும் நாம் இளமை முதல் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் பிற்காலத்தில் சிறந்த பல்வேறு அறிவுகள் உடையவர்கள் ஆக மாற முடியும்

நூல்கள் வாசிக்க வாசிக்க பற்பல அனுபவங்களை பெற்றிட முடியும் வாழ்க்கை முழுதும் மகிழ்ச்சியாக இருக்க புதிய வழியை நூல்கள் காட்டுகின்றன அவற்றைப் படித்து அதன் வழி நடக்க

நாம் பழகிக் கொள்ளல் வேண்டும் நூல்களை வாசிப்பதன் மூலம் நாம் பூரண மனிதராக மனிதத் தன்மையுடையோராக மன்னிப்புடன் வாழ முடியும் என்பதை முடியும் என்பதை உணர்ந்து பழக்கப் கொள்ளுதல் வேண்டும்

வாசிப்பதன் மூலம் மேலே கூறிய நன்மைகள் எமக்கு நடக்கின்றது அதேபோல் சில தீமைகளும் எம்மை வந்து அடைகின்றன. நூல்களை அதிக உணர்வோடு தொடர்ந்து வாசிப்பதன் மூலம் எமது கண் நோய் ஏற்படுகின்றது தொடர்ச்சியான வேலை பழக்கப்படுவதால் எமது கண் நோய் என்பவற்றுக்கு சில பாதிப்புக்கள் ஏற்படலாம் நாம் வாசிப்பதன் மூலம் எமக்கு உரியதான பாதிப்பு ஏற்படக் கூடும் நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும் எக்காரணம் கொண்டும் தீய புத்தகங்கள் பக்கம் செல்லவே கூடாது

எனவே வாசிப்போர் வெற்றி பெறுவோர் என்றும் கூறப்படும் சில சில நூல்களை கொண்டாடு வட்ட வட்டு தனில் உள்ள மகா மனிதனை போல் நாம் மேன் மேலும் உயரவேண்டும்.

By: - N. VITHTHAKI
Grade 13 Arts

# ஒரு புத்தகம் பேசுகிறது.

தர்மிகா

நான் ஒரு உறவினர் வீட்டிற்குச் சென்ற போது அங்கு ஒரு புத்தகம் இருந்தது. அந்தப் புத்தகம் குப்பைகளிடையில் கிடந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது. அப்போது அது தன் வரலாற்றைக் கூறத் தொடங்கியது.

நான் இந்தியாவிலுள்ள சென்னைப் பட்டணத்தில் உற்பத்தியாகி அலுவியா என்ற இடத்தில் புத்தகசாலை ஒன்றில் இறக்குமதி செய்யப்பட்டேன். அந்தப் புத்தகசாலையின் கடைமுதலாளி என்னையும் எனது நண்பர்களையும் மிக ஆவலோடு பார்த்தார். அவர் எங்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து என்னையும் எனது நண்பர்களையும் எனது நண்பர்களையும் மிகவும் ஆவலோடு பார்த்தார். அவர் எங்களுக்குத் தேவையான பணத்தை கொடுத்து என்னையும் என நண்பர்களையும் எடுத்துவந்து புத்தக அலுமாரியில் எங்களை மிக அழகாக அடுக்கி வைத்தார். அவருக்கு என்னை மட்டும் தான் பிடிக்கும். அவர் ஒவ்வொருநாளும் எங்களை சுத்தமாக வைத்திருந்தார்.

ஒருநாள் ஒரு சிறுமி அந்தப் புத்தகசாலையில் நுழைந்து எனது எல்லா நண்பர்களையும் இரசித்துப் பார்த்தார். அந்தச் சிறுமி நிறைய நேரம் பார்த்த போது என்னை பிடித்தது போல் தெரிந்தது. அந்தச்சிறுமி என்னை எடுத்து வந்து எனக்குத் தேவையான பணத்தை அந்தக் கடைமுதலாளியிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். சிறுமி தனது வீட்டிற்குச் சென்று என்னை மிகவும் அழகாக வைத்திருப்பார். அவர் சிலவேளை என்னை பார்த்துக்கொண்டு இருப்பார். அப்போது அவரது தங்கை மாலினி தனது அக்காவுடன் சேர்ந்து பார்த்துக்கொண்டிருப்பார். அவரது வீடு ஓலையால் கட்டிய வீடு ஆனால் என்னைப் பத்திரமாய் வைத்திருப்பார்.

ஒருநாள் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. அவர்கள் என்னை விட்டு அயல் வீட்டிற்கு சென்றுவிட்டார். அப்போது மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. அந்தச் சிறுமி நான் என்ன செய்வேன் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அந்த வேளையில் சிறுமியின் அப்பா என்னை மழையில் நனைய விடாமல் பாதுகாத்துக் கொண்டார். உடனே மழை விட்டது. அந்தச் சிறுமி மிக வேகமாக வீட்டிற்குள் ஓடி வந்தார். அவருக்கு நான் நனையாமல் இருந்தது மனமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவரது தந்தையாருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஒரு நாள் அவரது தங்கை மாதுளி என்னைத் தட்டித் தட்டிப் பார்த்த போது நான் கிழிந்து விட்டேன். மாதுளியின் அக்கா என்னைப் பார்த்த போது கவலையும் கோபமும் கூடியது. அவர் அழுது கொண்டு என்னைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார்.

அன்றிலிருந்து நான் அழுது கொண்டிருக்கின்றேன். எனக்கு அழுகை விடாமல் வந்து கொண்டிருக்கின்றது.

# வாசிப்பு ஒரு பயனுள்ள பொழுதுபோக்கு

"கற்க கசடற..." எனும் குறளை வள்ளுவர் இனிதாக கூறியுள்ளார். நாம் கற்பதற்கு மிக முக்கிய மூலாதாரமாக புத்தகங்கள் அமைகின்றன. அப்புத்தகங்களினால் நிரம்பிக் காணப்படுகின்ற நூலகங்கள் எனதும் என்னைப் போன்ற சக மாணவர்களினதும் பொழுது போக்கே கதைப் புத்தகங்கள், பாட்டுப் புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள் நாளிதழ்களை வாசிப்பது தான். ஒரு மனிதனை நல்ல சிறந்த பூரணமான மனிதனாக்குவதும் வாசிப்புத் தான். நல்ல புத்தகங்களை வாசிப்பதனால் நல்ல புத்தகங்கள் எமது நண்பர்கள் ஆகின்றன.

வாசிப்பு மனிதனை ஒரு வளமான மகிழ்ச்சிகரமாக்குகின்றது. இவ் வாசிப்புக்கெனவே பல நூலகங்கள் உள்ளன. அங்கு சென்று புத்தகங்களை வாசித்து எமது அறிவை பெருக்கிக் கொள்ளலாம். வாசிப்பு ஒரு மனிதனின் வாழ்க்கையின் முக்கிய அம்சமாகும்.

அன்பார்ந்த எனது தம்பிகளே! தங்கைகளே! சகமாணவர்களே! ஓய்வு நேரங்களில் நூலகத்திற்குச் சென்று உங்களது வாசிப்புத் திறனை மேம்படுத்துங்கள். நாம் பல நூல்களை வாசித்து விளங்கிக் கொள்வதன் மூலம் அறிவுக் கடல்களான திருவள்ளுவர், ஔவையார் போன்ற சிறந்த மனிதர்களாக வரலாம்.

வாசிக்கத் தெரியாத மனிதர்களை இன்றைய சமுதாயம் ஒரு பொருட்டாக கூட எண்ணுவது இல்லை. எமது நாடு எங்கேயோ முன்னேறி விட்டது. தமிழ் நாட்டிலேயே இருந்து கொண்டு நம் தாய் மொழியான தமிழ் மொழியை தெரியாமல் இருந்தால் எவ்வளவு அவமானம்.

இன்றைய காலத்தில் வாசிப்பை ஒரு பொருட்டாக மதித்து தேனை நாடிச் செல்லும் தேனீக்கள் போல வெல்லத்தை நாடிச் செல்லும் எறும்பு போல, பூக்களை நாடிச் செல்லும் வண்ணாத்துப் பூச்சிகள் போல, பழங்களை நாடிச் செல்லும் பறவைகள் போல நீங்கள் நல்ல நல்ல நூல்களைத் தேடி வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

By:-
K. Karsana
Grade 7A

# புத்தகம் பேசுகிறது.

K. தனுஜினா.

நான் பாதையால் சென்று கொண்டிருக்கும் போது அழுவது எனக்கு கேட்டது. யார் என்று திரும்பப் பார்த்தேன். ஆனால் அங்கு ஒருவரையும் காணவில்லை. ஆனால் அழுகுரல் கேட்டது. அழுகுரல் வந்த திசையை நோக்கிச் சென்றேன். பலதூரம் சென்றதும் ஒரு புத்தகம் அழுது கொண்டிருந்தது. ஏன் அழுகிறாய் என்று கேட்டேன். அது சொன்னது. தன் வரலாறே ஒரு சோகம் அதை நினைத்து அழுகிறேன் என்றது. புத்தகத்தின் வரலாற்றை சொல்லச் சொல்லி கேட்டேன். அது சொல்லத் தொடங்கியது.

வைக்கோலில் கடதாசி செய்து அதில் பல முக்கிய விடயங்களை எழுதி முன் பக்கத்தில் அழகாகப் படங்களை வரைந்து என்னை உருவாக்கினர். என்னைப் போல் பல்லாயிரம் பேரையும் உருவாக்கினர். எம்மை கொழும்பில் இருந்து கப்பலில் இங்கே கொண்டு வந்தனர். நாம் ஒரு கண்ணாடிப் பெட்டியில் இருந்தோம். இங்கே எதிரே உள்ள கடையின் முதலாளி நாம் இருந்த கடை முதலாளியிடம் பல பணத்தைக் கொடுத்து விட்டு எம்மைக் கண்ணாடி பெட்டியுடன் வாங்கிச் சென்றார். அந்தக் கடையில் எம் எல்லோரையும் வைத்திருந்தார். எம்முடன் இருந்த பலரை பலர் வந்து வாங்கிச் சென்றனர். என்னையும் என்னுடன் இருந்த சிலரை யாரும் வாங்கவில்லை. அதனால் நாங்கள் வருத்தப்பட்டோம். என்னுடன் இருந்த சில நண்பர்களில் அரைவாசிப் பேரை வாங்கிச் சென்றனர். ஒரு நாள் ஒரு சிறுவன் தன் தாயிடம் இந்த புத்தகம் மிக அழகாகவும், நல்ல விடயங்களும் உள்ளது. என தாயிடம் தெரிவித்தான். தாயாரும் என்னை அந்தச் சிறுவனிடம் வாங்கிக் கொடுத்தார்.

அவன் என்னை எந்த நாளும் படிப்பான். அவன் என்னைப் படித்துச் சென்றான். அதனால் அவன் ஒவ்வொருநாளும் பாடசாலையில் பாராட்டுக்களையும் வெற்றிகளையும் பெறுவான். தினமும் பாடசாலை, தியூசனுக்கு என்னை அழைத்துச் செல்வான். தான் அடைந்த வெற்றிகளையும் பாராட்டுக்களையும் தன் தாயிடமும் தந்தையிடமும் சொல்லுவான். அவர்களும் என்னைப் பாராட்டுவார்கள். நான் தினமும் சந்தோசமடைவேன்.

அவனும் எனக்கு உறை போட்டு அழகாக வைத்திருந்தான். ஒரு நாள் அவன் என்னை மறந்து வழமை வைப்பது போல அலுமாரியில் வைத்து விட்டு சென்றான்.

அலமாரியில் என் எதிரியான கரையான் இருந்தது. அது என்னை அரித்து துண்டாக்கி விட்டது. என்னை ஆர்வத்துடன் பார்க்க வந்தான் அந்தச் சிறுமி. நான் துண்டு துண்டாக இருந்ததைப் பார்த்து அழுதான். தன் தாய், தந்தையிடமும் என் நிலை பற்றிச் சொன்னான். தாய் கூறினார். வேறு ஒரு நாள் அழிய வேண்டிய இந்தப் புத்தகம் இன்று அழிந்தது. நான் உனக்கு வேறு புத்தகம் வாங்கித் தருகிறேன். என்று அவனைச் சமாதானம் செய்தாள். பின் அந்தப் புத்தகத்தை குப்பையில் போட்டார் என்றது புத்தகம்.

என் கடந்தகால வாழ்வின் சொகுசும் வாழ்க்கையை நினைத்து அழுகிறேன் என்றது புத்தகம். நானும் புத்தகத்தின் சோக வரலாற்றைக் கேட்டு விட்டு அப்படியே வீடு வந்து சேர்ந்தேன்.

தனுஷிகா.

# வாசிப்பு ஒரு பயனுள்ள பொழுதுபோக்காக

இன்று மாணவர்களிடையே வாசிப்பு பழக்கம் அருகி வருகின்றது. மாணவர்கள் தொலைக் காட்சி பார்ப்பதற்கு பதிலாக நல்ல நண்பர்கள் என்று சொல்லப்படும் புத்தகங்களை வாசித்தல் ஒரு சிறந்த பொழுது போக்காகும்.

"நூல் பல கல்" என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவிற்கு நமக்கு அறிவு வளரும். கண்டது கற்க பண்டிதனாவன் என்பது எமது ஆன்றோர் வாக்கு.

ஒரு மனிதன் வாசிப்பதனால் தான் மேலதிக அறிவை பெற முடிகிறது. நூல்களை வாசிக்கும் பழக்கம் உடையோர் ஒரு போதும் தனிமையை உணர்வது இல்லை. வாசிப்பு மனிதனை பூரணமாக்குகிறது அறிஞர் பேக்கன் இவரின் வாக்கிற்கமைய புத்தகம் வாசிப்பதில் நாம் ஓய்வு நேரத்தை கழிக்க வேண்டும்.

வாசிப்பை ஒரு பொழுது போக்காக கொள்வதால் நாம் அடையும் ஆனந்தத்திற்கு இல்லை. அறிஞர் அண்ணா புத்தகம் வாசிப்பதை ஒரு சிறந்த பொழுதுபோக்காக கொண்டிருந்தார். அதனால் அவர் வாழ்க்கையில் உயர்ந்தார்.

நாம் ஓய்வு நேரங்களிலே தேவை இல்லாத செயல்கள் செய்வதைத் தவிர்த்து புத்தகம் வாசிக்கும் பழக்கத்தில் ஈடுபட்டால் எமது அறிவு விருத்தி அடைவதோடு வாசிப்பு திறனும் விருத்தியடையும்

எமது ஓய்வு நேரங்களின் பல பொழுது போக்குகள் உண்டு. எனினும் வாசிப்பை போன்ற சிறந்த பொழுதுபோக்கை காண்பதே அரிது. புத்தகங்களிலே பல வகை உள்ளன அதாவது கதைப்புத்தகங்கள், பாடங்கள் பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் கலை தொடர்பான நூல்கள் என பல வகையான புத்தகங்கள் உள்ளன.

நாம் எந்தப் புத்தகம் என்றாலும் கருத்தூன்றி வாசிக்க வேண்டும் தற்காலத்தில் வாசிப்பில் ஈடுபடாத மனிதனை பூரணமானவனாக கருத முடியாது. புத்தகங்கள் கடல் போல பரந்துள்ளது. அதில் நாம் மூழ்கித் திளைக்க வேண்டும் அப்போதுதான் அதில் ஏற்படும் இன்பம் புரியும்.

நாமும் எமது பொழுது போக்காக புத்தகம் வாசிப்பதை ஏற்படுத்திக் கொள்வோம்.

# ஒரு புத்தகம் பேசுகிறது

அன்று சனிக்கிழமை நான் நூல்கள் வாசிப்பதற்காக நூலகம் சென்றேன். அங்கு நூல்களை எடுத்து வாசித்து கொண்டிருந்தபோது யாரோ அழுத சத்தம் கேட்டது. நான் சத்தம் வந்த இடத்தை நோக்கி சென்ற போது அங்கு ஒரு புத்தகம் அழுது கொண்டிருந்தது. அப்பொழுது நான் அதனை ஏன் அழுகின்றாய் என்று கேட்ட போது அது தனது வாழ்க்கை வரலாற்றைக் கூறத் தொடங்கியது.

நான் கொழும்பிலுள்ள ஒரு புத்தகத் தொழிற்சாலையில் எண்ணிலடங்காத பல எழுத்துக்களை, சிறுவர் மனதைக் கவரக் கூடிய பல படங்களையும் கொண்டு ஆக்கப்பட்டேன். என்னை அங்கிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு புத்தக சாலைக்கு ஒருவரின் மூலம் கொண்டு வரப்பட்டது. என்னை அந்தப் புத்தகசாலையின் முன்புறத்தில் கவர்ச்சியாக தொங்கவிடப்பட்டது.

நான் அங்கு தொங்கிக் கொண்டிருந்த போது வரணி பொது நூலகத்தை சேர்ந்த பொறுப்பாளர் ஒருவர் வாங்கிச் சென்று சிறுவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் முதலாவதாக வைக்கப்பட்டது. நூலகத்திற்கு வரும் எல்லா சிறுவர்களின் மனதிலும் நீங்காத இடம் பெற்றேன். எல்லா சிறுவர்களும் என்னை நூலக ஆசிரியரின் உத்தரவு உடன் வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்து விட்டு மீண்டும் நூலகத்தில் கொண்டு வந்து வைப்பார்கள்.

அதிகமாக சந்தோசப்பட்டால் கவலை இருக்கும் என்பது போல் எனது வாழ்விலும். நான் அனுபவித்த அளவு கடந்த சந்தோசத்தினால் ஒரு கவலை கிட்டியது. அன்று ஒரு நாள் என்னை ஒரு சிறுமி என்னை வாசிப்பதற்காக எடுத்துச் சென்று வீட்டில் வைத்தபோது அந்தக் கூரையில் இருந்த சில ஓட்டைகளின் மூலம் சில நீர்த்துளி விழுந்து என்னில் பதிக்கப்பட்ட எழுத்துக்கள் மங்கி விட்டன.

இதனால் அந்தச் சிறுமி என்னைக் கொண்டு வந்து நூலகத்திலுள்ள பொறுப்பாளரிடம் கொடுத்த போது என்னை இந்நிலையில் வீசிவிட்டார் எனக் கூறியது.

By:- V. Jinthusha



## யா/ வரணி மத்திய கல்லூரியில் நடைபெற்ற நூலகக் கண்காட்சி பற்றிய விபரணம்

யா/வரணி மத்திய கல்லூரியில் மாணவர்களின் நன்மை கருதியும் அவர்களின் அறிவுத் தேடலை ஊக்குவிப்பதற்காகவும் மேற்படி நூலகக் கண்காட்சியானது 19/06/2017 திங்கட்கிழமை அன்று எமது கல்லூரி முதல்வர் திருவாளர் ப. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் காலை 8.00 மணிக்கு கால்கோளானது இந் நூலகக் கண்காட்சியானது, எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து தென்மராட்சி பிரதேச வரணி பொது நூலகத்தின் உதவி நூலகர் வெ. சிவானந்தம் நூலகக் கண்காட்சியினை நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்களின் கல்வித் தேடலை விருத்தி செய்யும் முகமாக எமது பாடசாலையிலுள்ள நூலகமானது எமக்காக அளப்பரிய சேவையாற்றுகின்றது. இந் நூலகக் கண்காட்சியானது 2017 இல் சிறப்பாகவும் அம்சமாகவும் நடைபெற்று முடிந்தது. அதுமட்டுமல்லாது அந்நூலகக் கண்காட்சியில் இவ் வருடம் கொள்வனவு செய்யப்பட்ட புதிய நூல்கள், பல்வேறு நாடுகளின் நாணயங்கள், முத்திரைகள், அருங்கலைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் மாணவர்களின் புதிய ஆக்கங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

எமது பாடசாலையிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் இது நல்ல முறையில் பயன்பட்டது என்றே கூற முடியும். எமது ஆற்றலையும் அறிவையும் வளர்ப்பதற்கு 2017 இல் நடைபெற்ற நூலகக் கண்காட்சியானது பெரிதும் உதவியுள்ளது. இந்த வகையில் எமக்குத் தெரியாத பல அரிய விடயங்களையும், காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த அரிய பொருட்களையும் என்னால் பார்வையிட முடிந்தது. பல்வேறுபட்ட புதிய புத்தகங்கள் என் கண்களில் புலப்பட்டன. நான் என்றும் காணாத நல்ல பல அரிய கருத்துக்களைக் கண்டு வியப்புற்றேன். ஏனைய மாணவர்களும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் தத்தம் வகுப்பு ரீதியான புத்தகங்களைப் பார்வையிட்டனர்.

அது மட்டுமல்லாமல் நூலகக் கண்காட்சியில் புராதன நாணயங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்ப்பதற்கு மிகவும் வியப்பாக இருந்தது.

ஒளியில் என்றும் அறிந்திராத பற்பல நாணயங்கள் காணப்பட்டன. அதுமட்டுமல்லாமல் அந்த நாணயங்கள் பற்பல நிறங்களில் அமைந்து எம் கண்களிற்கு விருந்தளித்துக் கொண்டிருந்தன. பார்ப்பதற்கே மிகவும் ஆசையாக இருந்தது. இன்றைய அம் நூற்றாண்டில் புராதன நாணயங்கள் பார்ப்பதற்கு நூலகக் கண்காட்சி நல்லதொரு களம் எமக்கு அமைத்துத் தந்தது. அதுமட்டுமல்லாது இன்றைய காலங்களில் தற்போது வெளியிடப்பட்ட புதிய நாணயங்களையும் சில நிறங்களில் பார்த்தோம். பல்வேறு நாடுகளின் நாணயங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. முக்கியமாக நமது இலங்கை நாட்டின் நாணயமும் பல்வேறு வெளிநாட்டு நாணயங்கள் பற்றி பல தெரியாத விடயங்களை அறிந்து கொண்டோம்.

மேலும் அந் நூலகக் கண்காட்சியில் முத்திரைகளையும் பார்க்கக் கூடியதாக இருந்தது. நமது நாட்டிலுள்ள முத்திரைகளும் வேறு சில நாடுகளின் முத்திரைகளையும் பார்க்கக் கூடியதாக இருந்தது. பல்வேறுபட்ட பெறுமதிகளைக் கொண்டவாறு முத்திரைகள் ஒழுங்காக அடுக்கப்பட்டு மற்றவர்களின் பார்வைக்கு கவர்ச்சிகரமாக வைக்கப்பட்டிருந்தன மாணவர்கள் அறியாத, தெரியாத பல விடயங்களை இந் நூலகக் கண்காட்சியின் போது தெரிந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

மாணவர்களுக்கு அரியதொரு சந்தர்ப்பத்தினையும் நல்ல வாய்ப்பினையும் எமக்கு இந்த நூலகக் கண்காட்சியானது ஏற்படுத்தி தந்துள்ளது என்றே கூற வேண்டும். நூலக ஆசிரியரும் மேலதிகமாக எமக்குத் தெரியாத பல விடயங்களைக் கூறி எம்மை ஆச்சரியப்படுத்தினார். அது மட்டுமல்லாது எமது பாடசாலை மாணவர்களால் பல்வேறுபட்ட கைவினைப் பொருட்களும் எமது கண்ணைக் கவர்ந்தன. எம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி பனையோலையில் கூடை, சுளகு, பெட்டி என்பன நன்றாகப் பின்னப்பட்டு அதற்கு வெவ்வேறு விதமான நிறங்கள் கொடுத்தும் வைக்கப்பட்டிருந்தன. அது மட்டுமல்லாது புராதன விடயங்கள் பலவற்றையும் நாம் நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

மேலும் நூலகக் கண்காட்சியில் அருங்கலைப் பொருட்களும் எமது பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அதில் புராதன காலப் பொருட்கள் சிறப்பிடம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அதில் முக்குப்பேணி, வெண்கலத்தினாலான செம்பு,

வெற்றிலைத் தட்டு மற்றும் பலவகையான சிற்பவடிவங்கள் அதாவது சிற்பங்களிலே பல்வேறு வகையான உருவங்களில் பொருட்கள் செய்து வைத்திருந்தது மிகவும் சிறப்பிற்குரியது. மாணவர்கள் இதுவரை கண்ணால் காண முடியாத பொருட்கள் எல்லாம் அன்றைய நூலகக் கண்காட்சியில் பல்வேறு வகையான பொருட்களும் இன்றைய நவீன காலப் பொருட்களும் இன்றைய நவீன காலப் பொருட்களும் பார்வைக்கு வைத்தமை சிறப்பிற்குரியது.

இறுதியாக மாணவர்களின் புத்தாக்க சிந்தனையின் ஊடாக அவர்களது ஆக்கங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஆக்கங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒப்படைகள், சஞ்சிகைகள், பொது அறிவுத் தகவல்கள் மற்றும் சித்திர வரைபடங்கள், நடைபாடம். கற்கக்கூடிய மாணவர்களுக்கு பல்வேறுபட்ட தென்னாசிய சாஸ்திரிய நடனங்களும் காணக் கூடியதாக இருந்தன. இதனால் மாணவர்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர். அது மட்டுமல்லாது எமது நூலக ஆசிரியரான க. உமாபாலன் ஆசிரியர் அவர்கள் மாணவர்களுக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் நின்று விளக்கம் கொடுத்து வந்தார் அவ்வாறாக எமது கல்லூரியில் உள்ள எல்லா மாணவர்களின் அறிவுப் பசியினைத் தீர்க்கும் முகமாகவும், அவர்களின் அறிவுத் தேடலை விருத்தி செய்து கொள்வதற்கும் இந் நூலகமானது ஒரு பெரிய வாய்ப்பினை எமக்கு அளித்து உள்ளது. இந்த நூலகக் கண்காட்சியின் போது மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பார்வை இட்டனர். இந் நூலகக் கண்காட்சியின் மூலம் மாணவர்களின் கற்றல் திறனுக்கு இது பெருந்துணை புரிந்து வரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதே போன்று வருடா வருடம் இன்னும் பற்பல அரிய தெரியாத விடயங்களையும் சுவாரஸ்யமான அம்சங்களையும் மையப்படுத்தி ஒவ்வொரு வருடமும் இதே போன்று நடைபெறுமாக இருந்தால் அது வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சிக்குரிய விடயமுமாகும். மாணவர்களுக்கு நல்லதொரு முறையினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் நம்புகிறேன். இதேபோன்று அடுத்த வருடமும் இவ்வாறானதொரு நூலகக் கண்காட்சியானது நடைபெற வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

# உலகத்தையும் வாழ்வையும் வென்றவர்கள் ஆகுவோம்

இடிந்துபோன கட்டடங்கள்
உடைந்து போன மனங்கள்
வறண்டு போன வார்த்தைகள்
கிழிந்து போன ஆடைகள்
இழந்து போன உரிமைகளும்
உலகையும் வாழ்வையும் வென்றவர்கள்
- ஆகுவோம்.

பலாப்பழ சுவையின் வார்த்தைகளை
பூவை மயக்கத்தையும் ---------
நிலக் காலத்து நம்மவை
மீட்டுப்பார்க்கையாலும் ---------
என்றும் நற்பதோ
என் தாயின் புன்னகையே.

தெய்வத்தின் மகத்துவமும்
தேவதையின் வார்ப்புகளும்
அணைச்சம் பூக்களும்
அசைப் புன்னகைகளும்
அழகுக்கு அழகு சேர்ப்பது
உலகத்தின் வாழ்வே----

குழந்தையின் மழலையில்
பாட்டாவின் அயர்வையில்
பெண்ணின் கற்பில்
அசைவின் அழகில்
விஞ்ஞானியின் அறிவில்
நம் புன்னகை புதைந்தே இருக்கு.

பிறப்பன எல்லாம் இறக்கும்
இறப்பவை எல்லாம் பிறக்குமா?
கேட்டறிந்து ஆந்து நாமும்
இறப்பில்லா உலகை எண்ணை
மறுபடி பிறக்க வைக்காதே
என்றுரைத்தார் பட்டினத்தார்.

முதுமையின் நாற்காலியில்
இளமையின் நினைவுகளை
மீட்டுப் பார்க்கையில்
கண்களை நிறைக்கும்
என் இனிய பிறப்பின்
உலக வாழ்க்கை.

வாழ்க்கை புத்தகத்தின் பக்கங்களாய்
மோகத்தை ரம்பப்படுத்தும் புள்ளியாய்
இழப்புக்களை மறைக்கும் திரையாய்
உறவுகளை வலுப்படுத்தும் இணைப்பாய்
நித்தமும் அளவிட முடியாத சொத்தாய்
எம் உலக வாழ்வு மிளிர்கிறது.

அநாதையின் புன்னகை அன்னை தெரேசா
அறிஞன் புன்னகை அப்துல் கலாம்.
புரட்சிக் புன்னகை சேகுவேரா
சிந்திப்பான் புன்னகை நியூட்டன்
தொடரும் உலக வாழ்க்கையில்
சூழும் உலகப் புன்னகை.

M. Niruya.
A/L [2018]

# புத்தகம் எமது நண்பர்கள்

கறையானின் வயிற்றுப் பசியை
தீர்ப்பவையும் இவையே!
அறிஞரின் அறிவுப் பசியை
தீர்ப்பவையும் இவையே!
ஒரு வன்முறைக்கு வெள்ளைக் கொடி
காட்டுபவையும் இவையே!
அறிவில்லாதவனை அறிஞனாய்
மாற்றுபவையும் இவையே!
புராணக் கதைகளை எம் கண் முன்னே
கொண்டு வர செய்பவையும் இவையே!
இவருக்கு எல்லாம் நாம் நன்றிக் கடனை
செலுத்துவோம்.

By-: Jasinthiny

# நமக்கு நூல்கள் எதற்கு

வையத்துள் வாழ்வாங்கு வாழ
வாழ்க்கையை மாற்றியமைக்க அவ்வாழ்க்கை
ஆயிரமாயிரம் நூல்களோடு
ஆனந்தமாய் பயணிக்கட்டும்.

வானத்தை அடைந்து பார்த்திடலாம்
வாசிப்பை கற்றுக்கொள் - நண்பா
வாழ்க்கையில் வென்றிடலாம்.
நூல்களை கொழுமைக்க.

நல்ல நண்பனை தேடி நீ
ஏன் அலைகின்றாய்
அவனை துணை தேடி புத்தகமாக
உன்னிடம் வந்திருக்கிறது. ஏற்றுக்கொள்

ஊரெல்லாம் கட்டா காலியாக
இன்மையை இடப்பாதே.
பாரெல்லாம் படித்து படித்து
பட்டையை கிளப்படா

போரில் வெற்றிபெற
கத்தியை தூக்கியது போல
கல்வியில் வெற்றிபெற
வாசிப்பு புத்தகங்களை புரட்டிடு

சின்ன சின்ன புத்தகங்களை
சிரித்து சிரித்து படித்திடுவோம்
சிங்க நடை போட்டு
சிங்காரமாய் வாழ்ந்திடுவோம்.

அன்பு பசிக்கு அம்மாவைநாடு
தேவபசிக்கு தேடி - மொழிகளை நாடு
இதுவே வாழ்வின் இரகசியம்
வாழ்க்கையின் இலட்சியம்.

Nikarshan
by- [redacted]

## உலகத்தையும் வாழ்வையும் வென்றவர்கள் அநேகம்.

அலைகள் கடலில் ஓய்வதில்லை
அதுபோல் மனிதனில் மாற்றமில்லை
அமைதி படைக்க உள்ளம்
இலட்சியமே எனது மூச்சு என்கிறது.

அன்று படைத்த மனிதர் மனதில்
ஆழ்கடல் போல தோன்றுவது போல்
அருமையாய் எண்ணி நினைப்பது
இலட்சியமே எனது மூச்சு என்பதுதான்

இவ்வுலகில் வாழும் அனைவரும்
இலக்கை நோக்கி பயணிப்பதால்
இன்பம் துன்பம் இரண்டையும் கடந்து
இலட்சியமே எனது மூச்சு என்கிறார்

ஏழ்மையில் வாழ்கிற அனைவரும்
ஏழையோர் ஓர் உடலாய் இருந்து
என்றைக்கும் பெருமை சேர்க்க
இலட்சியம் என்பது மூச்சு என்கிறார்

எண்ணற்ற மக்கள் வாழ்வில்
என்றுமே எழுச்சி பிரகாசிக்கின்றது
எழுச்சியை நோக்கி பயணிக்க
இலட்சியமே எனது மூச்சு என்கிறார்.

ஒற்றுமையாய் வாழ்வில் முன்னேற
அர்த்தத்தை நோக்கி பயணிக்கிறான் மனிதன்
ஏழு ஜென்மம் எடுத்தாலும் மனிதன்
இலட்சியமே எனது மூச்சு என்கிறான்

உன்னதமான உலகிலே உருவாகி
உயிர் வாழும் அனைவரும்
உடமைகளை இழந்த போதிலும்
இலட்சியமே எனது மூச்சு என்கிறார்கள்

விடியலை நோக்கி பயணிக்க
விடிவெள்ளியாய் மனிதன் தோன்றுகிறான்
வியக்க வைக்கும் விந்தையான உலகில்
இலட்சியம் எமது மூச்சு என்கிறான்

by :-
S. Jaliny
A/L [2018]

# புத்தகம் எமது நண்பர்கள்

காலை எழுந்தவுடன் உனை நாடினேன் - எனக்கு
காட்சிகள் பல தந்தாய் நண்பா!
கதிரவன் உதித்த நேரத்திலிருந்து - எனக்கு
காத்திரமான பாடங்கள் பல தந்தாய் நண்பா!

அன்புடன் உனை நெருங்கினேன் - என்னுள்
அறிவை வளர்த்தாய் நண்பா!
இரவு வேளையில் உனை நாடினேன் - எனக்கு
இன்பம் தனை கொடுத்தாய் நண்பா!

எதிரியாய் உனை பார்க்கையில் - என்னை
எஜமானாய் வழி நடத்தினாய் நண்பா!
உறக்கம் இல்லை என்று உனை அணைத்தால் - எனக்கு
உற்ற துணையாய் இருந்தாய் நண்பா!

சாகசங்கள் பல சொல்லி - என்னை
சந்தோஷப்பட வைத்தாய் - நண்பா!
தொலைக் காட்சியை மனம் நாடுகையில் - என்னை
தொலைய வைத்தாய் உன் ஆற்றலால் நண்பா?

நட்புடன் உன்னோடு பழகையில் - எனக்கு
நல்வழி காட்டினாய் நண்பா!
ஆசை வார்த்தைகளைக் கடந்து - என்னுள்
ஆளுமையை வளர்த்தாய் நண்பா!

பாசமாய் உனை நாடினேன் - எனக்கு
பாடல்கள் பல தந்தாய் நண்பா?
அழகிய கவிதைகள் எல்லாம் தந்தாய் - என்
அச்சத்தை நீக்கினாய் நண்பா?

நூலகத்தில் உன்னை தேடிப் படித்தேன் - எனக்கு
நுண் கலைகள் கற்பித்தாய் நண்பா?
உயிராய் உன்னுடன் பழகினேன் - எனக்கு
ஏக்கத்தை அழித்தாய் நண்பா? By: N.Jarusha



# புத்தகங்களுடன் நேசிப்போம்

வண்ண வண்ண புத்தகங்களாம்
சிரிக்க வைக்கும் புத்தகங்களாம்
சிறுவர் எங்களைத் தேடியே வந்த
எம்மை சிந்திக்க வைக்கின்ற புத்தகங்களாம்

புத்தக கடலில் நாம்
மிதந்து சிரிக்கின்றோம்
கடல் பொங்கினால் ஏற்படுவது - அனர்த்தமாகும்.

பாடிப் பாடியும் ஆடி ஆடியும்.
சின்னஞ் சிறுவர்களை
சிரிக்க வைக்கும் புத்தகங்களுடன்,
நாமும் புன்னகை புரிவோம்

எமது அறிவிற்கும் சிந்தனைக்கும்,
உதவுபவை எவை? நூல்கள் தான்.
நூல்கள் பல உண்டு! ஆனால்
நாம் தான் அதை வாசிப்பதில்லையே!

அறிவியல் காலத்தில் இப்போது பல
சாதனங்கள் வந்து விட்டன.
எமது மனதை மனப்பூர்வமாக
சிரிக்க வைக்கின்றவை புத்தகங்களாம்

தேனிலும் இனிய மாங்கனியைப் போன்ற
சிரிக்க வைக்கும், சிந்திக்க
வைக்கும் புத்தகங்களுடன் பூவிதழ்
போன்ற சிறுவர்களின் உதடு புத்தகங்களால் சிரிக்கின்றது.

By:-
R.Kobirammiya.

# வாசிப்பே சமாதானத்தின் வழி

சமாதானம் இன்றி வாழும் மனிதா
சமாதானத்திற்கு ஓர் அரிய வழி

சண்டை சச்சரவு என்று ஏங்கும் மனிதா.
சமாதானத்திற்கு ஓர் அரிய வழி.

வாழ்க்கையில் சமாதானம் இல்லை என்று ஏங்காதே,
வாழ்க்கையில் அதை நீதான் பெற வேண்டும்.

நல்ல நல்ல புத்தகங்கள் உள்ளதே
நம் அறிவுக் கண்ணைத் திறந்திட

புத்தகங்கள் வாசிப்போம் அதுவே இவ்வரியவழி.
வாசியுங்கள் நன்றாக வாசியுங்கள் கருத்தூன்றி.

கருத்தூன்றி. வாசியுங்கள் கருத்து பல பெற்று.
கண்ணியமாய் வாழ்க்கை வாழ்

சமாதானம் பெற்றிட வாசியுங்கள்!
சமாதானத்தை வாழ்க்கை வாழுங்கள்!

By:
J. Athishaya.

# வாசிப்பு ஒரு சிறந்த பொழுது போக்கு.

வாசிப்போம் வாசிப்போம் வாருடனே.
பண்ண வண்ண சால்லை மரம்பாயே
பொழுது போக்காக தொலைக் காட்சியை நம்பாயிருப்பது ஏன்?
புத்தகங்களை நம்புங்கள், வாழ்
பெறுவீர்கள்.

பொன் போன்ற வாசிப்பை பொழுது.
போக்காக, சிறப்புடை வீர்கள்
வாழ்க்கையில் நாமும் உயர்ந்திடவே
மாம்பப் புத்தகம் வாசிப்போம்
வாசிப்பால் நாம் ஈடுபட்டால்
நாழிகை செல்வதும் தெரியாதே.

வாசிப்பு என்றும் மங்கிலலே.
வண்டு வந்து மொய்த்திடுமாம்
ஏன்?
அங்கேதான் சுவையான தேன் இருக்காம்.

வாழிய! வாழிய! வாழியவே
வாசிப்பு என்றும் இருக்கவே!